ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1848/29 - 2014 පෙබරවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.02.06

*1848/29 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51* (viii)

**மோட்டார் வாகனச் சட்டம் (203 ஆம் அத்தியாயம்)**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 128அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2014, சனவரி 23.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, "மோட்டார் வாகனம்" (பொதுச் சேவை சாரதி உரிமம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2015.01.01 அன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஏதேனும் வகுப்பினதான அல்லது எவையேனும் வகுப்பினவான வாகனங்களிற்கான உரிமம் ஒன்றை வைத்திருக்கும் எவரும் சட்டத்தின் 128 அ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் விசேட புறக்குறிப்பீடொன்றின் மூலம் அவருக்கு அதன்சார்பாக அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான பொதுச்சேவை வாகனமொன்றாக மோட்டார் கோச்சு ஒன்றை ஓட்டுதல் ஆகாது.

3. பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான ஏதேனும் பொதுச்சேவை வாகனத்தை ஓட்டுவதற்கென உட்கருதுகின்றவரான ஏதேனும் வகுப்பினதான அல்லது எவையேனும் வகுப்பினவான வாகனங்களுக்கான உரிமம் ஒன்றினை வைத்திருப்பவர் எவரும் ஆணையாளர் தலைமையதிபதியினாலான விசேட புறக்குறிப்பீடுகையினை வழங்குவதற்கான விதிப்பனவு ஒன்றான இரண்டாயிரம் ரூபா (2,000 ரூபா) கொடுப்பனவுடன் சேர்த்து இவ்வொழுங்குவிதிகளிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

4. பின்வரும் தேவைப்பாடுகளும் தகைமைகளும் பொதுச்சேவை வாகனம் ஒன்றான மோட்டார் கோர்ச் ஒன்றை ஓட்டுவதற்கான விசேட புறக்குறிப்பிடுகை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பகாரர் ஒருவரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பகாரர்-

(i) 25 வயதிற்கும் 65 வயதிற்கும் இடையிலான (இரண்டும் உட்பட) வயதினை உடைய ஆளொருவராக இருக்கின்றார் எனவும் ;

(ii) மோட்டார் கோச்சு ஒன்றுக்கான ஒழுங்கான சாரதி உரிமம் ஒன்றினைப் பெற்றுக்கொண்ட பின்னர் இரண்டு வருட சாரதி அனுபவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும் ;

(iii) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுள்ளார் எனவும் ;

(iv) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அல்லது முதல் உதவிக் கற்கை நெறியை நடாத்துவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அத்தகைய கற்கை நெறி ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் ;

(v) ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அதன்சார்பாக அவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொறிமுறை அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனவும் ;

(vi) பயிற்சிக் கற்கை நெறியை நடாத்துவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்பட்ட அத்தகைய பயிற்சிக் கற்கை நெறி ஒன்றைப் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார் எனவும் ;

(vii) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் குற்றவியல் பதிவேடு எதனையும் கொண்டிருக்கவில்லை எனவும்.

ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படும் வகையில் எண்பித்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதியில் -

“சட்டம்” என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் எனப் பொருள்படும்.

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது, சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ; அத்துடன்

“பொதுச் சேவை வாகனம்” என்பது, கட்டணத்திற்கு அல்லது வெகுமதிக்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு இசைவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

பொதுச்சேவை வாகனங்களை ஓட்டுவதற்கான விசேட புறக்குறிப்பிடுகை ஒன்றிற்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முழுப்பெயர் :----.
3. முகவரி :----.
4. மாவட்டம் :----.
5. தேசிய அடையாள அட்டை இல. :----.
6. பிறந்த திகதி :

| தி | மா | வ |
|---|---|---|
| | | |

7. பால் (ஆண்/பெண்) :

8. உயரம் : சென்ரி மீற்றர்

9. தொழில் :----.

10. எந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்களுக்கு உரிமம் செல்லுபடியானதாக இருக்கின்றதோ அந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்கள் :----.

11. விண்ணப்பகாரரின் சாரதி உரிமத்தின் விபரங்கள் :----.

(அ) சாரதி உரிமத்தின் இல. :----.

(ஆ) வழங்கற் திகதி :

| தி | மா | வ |
|---|---|---|
| | | |

(இ) வாகன வகுப்பு அல்லது வகுப்புகள் :----.

(ஈ) காலாவதியாகும் திகதி :

| தி | மா | வ |
|---|---|---|
| | | |

(உ) சாரதி முன்னேற்ற புள்ளிகள் (விண்ணப்பம் செய்யும் நேரத்தில் ஏதேனும் இருப்பின்) :----.

12. சாரதி உரிமம் ஒன்றைப் பெறுவதில் இருந்து நீர் தகமையற்றவர் ஆக்கப்பட்டுள்ளீரா அல்லது உம்மால் வைத்திருக்கப்பட்ட உரிமம் ஒன்று நீதிமன்றம் ஒன்றினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதா அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளதா? ஆம் எனில் வழக்கின் விபரங்களையும் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தையும் தரவும் :

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன விண்ணப்பிக்கும் நேரத்தில் காண்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவற்றின் ஒளிப்படப் பிரதிகள் ஒவ்வொன்றும் புறக்குறிப்பீட்டுக்கான விண்ணப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

2- 575

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.